உ

கடவுள் துணை.

மஹா கவிச்சக்கிரவர்த்தி கம்பர் குமாரன்

திருவாய்மலர்ந்தருளிய

அம்பிகாபதிக் கோவை

என்னும்

பெரிய

# பலதுறைக்காரிகை

மூலமும் - உரையும்

சி - இராகவமுதலியா ரவர்களால்

சென்னை-சூளை:

ஸ்ரீ கணபதி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது,

1930.

இதன் விலை காபிரைட். அணா 6,

கடவுள் துணை.

மஹாகவிச்சக்கிரவர்த்தி கம்பன் குமாரன்

திருவாய்மலர்ந்தருளிய

அம்பிகாபதிக் கோவை

என்னும்

# பெரிய

# பலதுறைக் காரிகை.

## மூலமும் - உரையும்

இது கொரக்கோட்டை

ப-வடிவேலு செட்டியார்

அவர்களால் பிழையற பரிசோதித்து

உரை எழுதியதை.

சி-இராகவமுதலியா ரவர்களால்

சென்னை-சூளை:

ஸ்ரீ கணபதி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது,

1930.

# முகவுரை,

ஆழிசூழ் இப்பூவுலகின்கண் பலபலகோவை, உலா, அந்தாதி, னாதுமுதலிய நூல்களிருப்பினும், அதன் இடையே நமது கவிச்சக்ர வர்த்தியாகிய கம்பர் குமாரனாகிய அம்பிகாபதியின் சரித்திரமும் அவர் பாடல்களும் எவரும் வியக்கத்தக்கதேயாம்.

பல்லோரும் வியக்கத்தக்க அம்பிகாபதியால் பாடிய பாடல்களை பலவிருப்பினும் சமயசிந்தையோடு பாடிய விஷயாதிகளின் ஓர்பகுதி யாகியது வசந்தமண்டபத்தில் பாடியதேயாகும்:

அப்பாடல்கள் இருந்துதேயந்ததால் கவனித்து ஆரையுங்கால் சிதறிய பரக்கண்காணாபர நம்பரையிலராலும் தனிப்பாடற் றிரட்டா லும் ஒருவாறு ஆராய்ந்தெடுத்து ஒருங்குசேர்த்து திரட்டிவெளியிட டலாயினனேம் கம்பர்செய்த நூலுக்கு கம்பநாட்டாழ்வார் இராமா யணமென்றும் வில்லிசெய்த பாரதத்திற்கு வில்லிபுத்தூர் ஆழ்வார் பாரதமென்று விளங்குவதுபோன்று, அம்பிகாபதிபாடிய பாடலுக்கு அம்பிகாபதிக்கோவையென நாமஞ்சூட்டலாயிற்று அதினும்பலவிஷ யங்களை விளக்கியதால் பலதுரைகாரிகையென மகுடம்கொடுக்களா யிற்று. யார்பார்க்கினும் யார்கேழ்க்கினும் இதன்கருத்து சிற்றின்ப மென்றும் பேரின்பமென்றும் கவனித்து ஆராய்ந்து அறிவுடையோர் கருத்தாகும்,

இந்நூல் சிதறுண்டதால் அவ்வவ் அமயங்களில்பாடிய பாடல்க ளையும் தொடர்புடன்பாடிய பாடல்களையும் திரட்டிசெய்து விடுத்து ளோம்.

# அம்பிகாபதி சரித்திரச் சுருக்கம்.

சோழநாட்டை அரசுசெய்துவந்த சோழபாண்டியனுக்கு, மகா கவிச்சக்கிரவர்த்தியாகிய கம்பன் பிரதான மந்திரியாகவும், ஆதீனப் புலவனாகவு மிருந்தார். அரசனுக்கு ஓர் ஆண்பிள்ளையும் ஓர் பெண் பிள்ளையும் உண்டு. கம்பனுக்கும் தக்க பருவத்தில் ஓர் ஆண்மகவைப் பெற்றார், அரசன் குமாரனுக்கும் குமாரத்திக்கும் கம்பனே கல்வி யாசிரியராக கற்றுக்கொடுத்துவந்தார். கம்பன் குமாரனாகிய அம்பி காபதிக்கும் தன் தந்தையாகிய கம்பனே நற்றமிழ் ஆசிரியராக இல் லத்திலேயே கல்விப்பொருளை கற்பித்து தன்போன்று தேர்ச்சி யடையச் செய்தார்.

நிற்க, ஓர்நாள் இரவு நடுஜாமத்தில் அரசன் நகர்சோதனைவரும் போது, இடையில் ஓர் காளிகோயிலில் அநேகம் பேய்கள் காளிக்கும் திருத்தொண்டு பணிசெய்துக்கொண்டிருக்க, அதில் ஓர் பேய் தேவி க்கு சந்தணம் அரைத்துக்கொண்டிருந்தது. பக்கத்திலிருந்த ஒரு பேய் அரைத்த சந்தணசாந்தை விரலால்தொட்டு முகர்ந்தது, அதை க்கண்டு மற்றொருபேய் தேவிக்கு அரைக்கும்சாந்தை குற்றமுண் டாகும்படி தொட்டனையாவென்று எதிரேயிருந்த வளைவு கத்தியைக் கொண்டு அதன்விரலை துண்டித்துவிட, இந்த உள்ளன்புடைய பக்தி யும், தக்க தண்டனையுங்கண்ட அரசன் இவ்வாச்சர்யத்தை கம்பன் வாக்கால் கண்டசுத்தியாகக் கேழ்க்க ஆவலுள்ளவனாய் கம்பன் வீட் டிற்குவந்து தெருக்கதவைத் தட்டினான்.

அச்சமயம் கம்பன் வீட்டின் அரையினுள், அவர்குமாரன் அம் பிகாபதி தெரு நடத்திண்ணையிலும் படுத்து உறங்கிக்கொண்டிருக்க, கதவைத்தட்டிய அரவங்கேட்டு, அம்பிகாபதி விழித்துக்கொண்டு, சரஸ்வதிதேவியை சிந்தித்து, வந்தவன் அரசனென்றும், அவன் கோரியது கண்டசுத்தியென்றும் அறிந்தவனாகி, “கரைக்கு வடக் கிருக்கும்:” என்ற கண்டசுத்தியை பாதிவெண்பாவாகப்பாட, பாதி முடிவதற்குள் பாட்டின் அரவங்கேட்ட கம்பன் உள்ளிருந்தபடியே மற்ற பாதியும் பாடிமுடிக்கக்கேட்ட அரசனவன் வீட்டிற்குவந்து விட்டான்,

பரிடியபாட்டின் குறள் இருவகையுடைத்தா யிருந்ததால், மறுநாள் வித்வசபையில் கம்பனை விளித்து நடந்தவைகளை வினவ, அவரும் ஒளியாது சொன்னார். அம்பிகாபதியின் கல்வித்திறத்தை மெச்சியவராகிய அரசன் மறுநாள் தொடங்கி அம்பிகாபதியை அரசவித்வசபைக்கு அழைத்துக்கொண்டு வரும்படி ஆக்யாபிக்க அதுபோல் கம்பன் தன்மகனை அழைத்துக்கொண்டே தினம் வரப்போகலாயினன்,

அம்பிகாபதி தினம் சபையில் ஒவ்வொரு அற்புதங்களைப் பாடிவருவதை கம்பனிடம் கல்விபயின்று அதன் சுவையறிந்த அரசிளங்குமரி, அம்பிகாபதிமேல் பூரண காதலுடையவளாகி ஒருநாள் சமயம் வாய்த்தபோது தனித்துவந்த அவனிடம் தன் எண்ணத்தைக்காட்டி மையலேமூட்டி தன் கருத்திற்கு இணங்கச்செய்ய இருவரும் மனமொத்தவராய் பிரதிதினம் இரவு நடுஜாமத்தில் அரசனிடவசந்த மண்டபத்தில் சந்தித்து தங்கள் கருத்தை முடித்துக்கொண்டிருந்தார்கள்.

இவ்வாறு பிரதிதினமும் நடந்தேறிவர ஓர்நாள் அரசன் நகர்சோதனைவந்து அங்கு களவுபுணர்ச்சிக்காக செல்லும் ஓர் பெண்பாலால் அம்பிகாபதியும் தன்மகளும் வசந்தமண்டபத்தில் களவாக இணங்கியிருப்பதை யறிந்து, அதனை சோதிக்கவேண்டி மறுநாள் வாளுடன்சென்று காத்திருக்க, முன்னே தன்குமாரத்தி பலகாரதட்டுடன் வந்ததையும் பிறகு அம்பிகாபதிவந்து தன்மகளை விழைந்து 'மாலேநிகரொத்த' என்னும் பலதுரையாகப் பாடிய நூறு பாட்டுடைய கோவையைக்கேட்டு வெட்டாதுவிடுத்து மறுநாள் அவனது தந்தைக்கு உள்ளதைபுரைக்க அவனும் நம்பாததால், பலவிதத்திலும் சுட்டி நம்பும்படிக்குக் காண்பித்து, ஒட்டக்கூத்தராலும் கம்பராலும்சம்மதிக்கச்செய்து அம்பிகாபதி தன்னால் உயிர்போக்கினன்.

அடுத்தாப்போல தன்மகன் பழிக்கு அரசன் மகனைக்கொன்று பின் கம்பரைக்கொன்று அதனல் இருசந்ததியும் அழிந்தனர்.

உ

கடவுள்துணை.

---

அம்பிகாபதிக் கோவை என்னும்

# பெரிய

# பலதுரைக் காரிகை

## மூலமும் - உரையும்.

கட்டளைக் கலித்துறை,

மாலேநிகரொத்த வாழ்பாண்டிநாடன் வரையிடத்தே
பாலேறுபாய தேன்மாரிபெய்யநற் பாகுகற்கண்
டாலேயெருவிழ முப்பழச்சேற்றி னமுதவயல்
மேலேமுளைத்த கரும்போ விம்மாதுக்கு மெய்யெங்குமே.

உரை-மகாவிஷ்ணுவுக்குச் சமானமாகிய பாண்டியராஜன் அரசு நடாத்தும் மலைகளின் வளப்பத்தையுடைய நாட்டின்கண் அமுதத்தினால் ஏர்விழுந்து தேனினால் மழைபெய்து கற்கண்டின் பாகினால் யெருவிட்டு மா-வாழை பலாவென்னும் மூன்றுபழங்களினால் சேறு கூட்டி அதின்மீது விளைந்த இனியசுவைபொருந்திய கரும்பாகும் இப்பெண்ணின் சரீரமுழுதும்,

இச்செய்யுள் வசந்தமண்டபத்தில் நடுநிசிவேளையிலே தன்னையும் அரசிளங்குமாரியையும், தனதுவாளால் வெட்டவேண்டுமென்று அரசன் மரத்தின்மீது ஏறிக்கொண்டு காத்திருக்கையில் அப்போது முன்னதாகவந்து காத்துக்கொண்டிருக்கும் அரசிளங் குமரியை வந்த அம்பிகாபதிமுத்தமிட மாதருந்துநாலாநாள் ஆனதினால் அவள் இதழ் இனிக்க சரீரமே இனிப்புடையதென்று பாடியது,

இயற்கையிலேயே கரும்பிற்கு இனிப்பிருந்தும் முப்பழச் சேறும் கற்கண்டின் எருவும் தேனின்மாரியும் பாலால் ஏரும் என்று கூறியது சிறப்பித்தேயாம்.

மய்வடிவக் குழலியர்தம் வதனத்தை
 நிகரொவ்வா மதியேமானே
செய்வடிவைச் சிற்றிடையைத் திருநகையை
 வேய்த்தோளைத் தெய்வமாக
இவ்வடிவைப் படைத்தவடி வெவ்வடியே
 யானரியே னுண்மையாகக்
கைப்படியத் திருமகளைப் படைத்திவளைப்
 படைத்தனனற் கமலத்தோனே.

உரை-மேகத்தினுருவமாகிய குழலியர்தம் கூந்தலையுடைய மாதரது முகத்தை ஒவ்வாத சந்திரனே மான்போன்ற மிரண்டபார்வையுடைய பெண்ணே செய்யப்பட்ட உருவத்தையும் நுட்பமாகிய இடைய்யையும் அழகிய பற்களையும் மூங்கில்போல தோள்களையும் தெய்வீகமாக இந்த அழகைப்படைத்த உருவம் எவ்வடிவோ யான் அறியேன் உண்மையாக அழகிய தாமரைமலரில் இருப்பவனாகிய பிரமதேவன் கைபடியும்பொருட்டு திருமகளைச் சிருஷ்டித்து இவளைப்படைத்தனன். இதுவும் அரசன்மகளைப் புகழ்ந்து பாடியது.

உருகி உடல்கருகி யுள்ளீரல் பற்றி
எரிவ தவியா தென்செய்வேன்-வரியரவ
நஞ்சிலே தோய்ந்த நளினவிழிப் பெண்பெருமாள்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

உரை — நீண்ட பாம்பின்விஷத்தில்தோய்ந்த தாமரை மலர்போன்ற விழிகளையுவடைய பெண்களுக்கரசி என்மார்பிலே மூட்டி விட்ட நெருப்பானது மனமுருகி உடம்பு கரிந்து நெஞ்சில் உள்ள ஈரல்மூண்டெரிவது ஆறாது என்ன செய்வேன்.

பூவரசநிழலில்ல புதுநிலாவிலே
வேகுதேயென்மனம் விரக தாபத்தால்
யாவர்மக ளாயினு மருகினி லிருந்தக்கால்
காவலென் றறியுமோ காமவாதையே.

உரை—பூவரசன் மரத்தடி நிழலிலும், மூன்றும் பிறையாகிய புதியநிலவின் வெளிச்சத்திலுமிருக்கும் எனதுமனம் விரகவேதனை யால் வேவுகின்றது இப்போது இந்த அரசிளங்குமரி யல்லாமல் வேறுயாவருடைய குமாரத்தியாக இருந்தபோதிலும் எனது இச்சையின்வாதையானது இதற்குயாதொரு காவல் உண்டென்று அறியுமோ அறியாது.

தந்தையைக்காண வரும்போது மாளியின்மேல் உலாவிக் கொண்டிருக்கும் அரசிளங்குமரியைக்கண்டு நெடுநாள் நேசத்தால் மாலைப் பொழுதைச்சுட்டிப் பாடியது.

பூவரசனிழலிலே புதுமடாவிலே
வேவுதுகொழுபயிர் விறகுதீயினால்
யாவர்பயிராயினு மருகினிலிருந்தக்கால்
காவலென்றறியுமோ கையும்வாயுமே.

உரை—பூவரசமர நிழலடியில் இருக்கப்பட்ட நான் என் எதிரில் விறகுதீயினால் கொள்பயிர்வெந்துக்கொண்டிருக்கிறது அதைக்கண்ட என்பசிநோயானது எவர்களுடைய கொள்பயிருக இருந்தபோதிலும் என்கையும் வாயும் இதற்குயாதொருகாவல் உண்டென்று அறியுமோ அறியாது.

மேல்சொல்லிய பாட்டில் அமராவதிபாடியபோது அரண்மனைக் குள்ளே வார்த்தையாடிக்கொண்டிருந்த கம்பன்துணையுள்ள அரசன் பாடியது அம்பிகாபதியென்றுணர்ந்து அவனை அழைப்பித்து கம்பன் முன்னதாகவும் தன்முன்னதாகவும் அப்பாட்டை மறுமுறைபாடச் சொல்ல "சொன்னசொற்களை மாற்றினும் மாற்றுவர்" என்பதற்கிணங்க தன்மீது குற்றமுண்டாகாவண்ணம் மேற்பாட்டை மறைத்து பசியை சுட்டிக்காட்டி மாற்றிபாடியதாம்.

இட்டடிநோவ வெடுத்தடி கொப்பளிக்க
வட்டில்கமந்து மருங்கசையக்-கோட்டிக்
கிழங்கோகிழங்கென்று கூறுவா ணாவில்
வழங்கோசை வையம் பெறும்.

உரை—நிலத்தில்வைத்த அடிநோவவும், நிலத்தில் வைத்து எடுத்த அடி கொப்பளிக்கவும், வட்டிலேச்சுமந்து இடை அசையவும், கொட்டிக் கிழங்கோ கிழங்கு என்று கூறுவாள் நாவிலுண்டாகுங் குரல் உலகமுழுதும் விலேமதிக்கப்பெறும்.

அரசன் மகளே அம்பிகாபதி இச்சித்ததாககச் சந்தேகித்து, சந்தேக நிவர்த்தியின்பொருட்டு ஒரு விருந்துசெய்து, அம்பிகாபதி யுடன் மற்றுஞ்சிலரை வரவழைத்து, அவர்களுக்கு தன்குமாரத்தி யையே பரிமாறச் சொன்னபோது அக்குமரி பதார்த்தவட்டிலேச் சுமந்துவரக்கண்ட அம்பிகாபதி மோகமிகுதியால், இட்டடி நோவ எடுத்தடி கொப்பளிக்க-வட்டில் சுமந்து மருங்கசைய, என்று அரை ப்பாட்டுபாடினதைக்கண்ட கம்பர் தன்மகனுக்கு அபாயம் வருமென் றஞ்சி சரஸ்வதியைத் தியானம்பண்ண, சரஸ்வதி ஒருகிழவியுருவங் கொண்டு கொட்டிக்கிழங்கு விற்பவள்போல்வர அதைப்பொருத்தி மற்ற அரைப்பாட்டு கம்பர் பாடியது.

சற்றேபருத்ததனமேகுலுங்கத்தரளவட்டம்
துற்றேயசையக்குழையூசலாடத்துவர்கொள்செவ்வாய்
நெற்றேனொழுகநடனசிங்காரநடையழகின்
பொற்றேரிருக்கத்தலேயலங்காரம்புறப்பட்டதே,

உரை—சற்றும்பெருத்த தனங்கள் குலுங்கவும், முத்துமாலே கள் நெருங்கியசையவும், குண்டலங்கள் ஊசலாடவும், பவளத்தின் தன்மையைக்கொண்ட செவந்த வாசின்கண் நல்ல தேனொழுகவும், நடனசிங்கார நடையழகினையுடைய பொற்றேராகிய உடல் உள்ளே யிருக்க சிரத்தினழகு வெளிப்பட்டது.

இது அரசன் தன்மகளே அம்பிகாபதி இச்சித்தானெனச் சந் தேகித்து சிற்றின்பமாகப் பாடாமல் நூறுகவி சுவாமிவிஷயமாகப் பாடினால் தண்டியாமல் விட்டுவிடுகிறேனென்று சொல்ல, அம்பிகா பதி அவ்வாறே பாடிக்கொண்டுவருகையில் அரசிளங்குமரி மறை வாக இருந்து எண்ணிக்கொண்டுவந்து 99-பாடல் பாடினவுடன் காப் புச்செய்யுளுடன் நூறு என்று நினைத்து எட்டிப்பார்த்தபோது பத் டியது.

நடந்தாளொருகன்னிமகராஜசேகரிநல்டில்ரெண்டு
குடந்தானசையவொயிலானதுகண்டுகொற்றவரும்

தொடர்ந்தார்சந்யாசிகள்யோகம்விட்டார்சுத்தசைவரெல்லாம்
மடந்தானடைத்துசிவபூசையுங்கட்டிவைத்தனரே.

உரை—உலகில் இரண்டு குடங்களைக்கொண்டு மகராஜ சேகரி என்னும் ஓர் பெண் நடந்தாள். அவளது நடையின் அழகைக்கண்டு அரசர்களும் பின்தொடர்ந்தார்கள். சந்நியாசிகள் தாங்கள் அனுஷ்டித்துவரும் யோகங்களை துறந்தார்கள். பரிசுத்தமாகிய சைவர்களெல்லாம் அவளுக்காக மடத்தையடைந்து அவள்பெயரினால் சிவபூசை செய்வதற்கு ஆலயமும் கட்டிவைத்தார்கள்.

மறக்கப்படுவதில்லைகாசியில்வாழிளவஞ்சியைவிட்
டுறக்கம்வருவதில்லையூணில்லையானந்தவூர்குறித்து
பறக்கவென்றாலுஞ்சிறகில்லைபஞ்சபாணனம்பு
பொறுக்கப்படுதில்லையென்றேவண்டேசொல்லும்பூவையர்க்கே

உரை—வண்டே! காசியில்வாழும் வஞ்சிக்கொடிபோன்ற இடைப்பிணியுடைய பெண்ணை மறந்துவிடவும் ஆவதில்லை; அவளால் நித்திரையும் வருவதில்லை, போஜனம் உட்கொள்ளுவதுமில்லை, அவ்வூரை நாடிப் பறந்துபோகவென்றாலும் இறக்கையில்லை, பஞ்சபாணன் என் மீது எய்யும் மலர்க்கணைவாதையும் பொறுக்கமுடிவதில்லை யென்று அவளுக்கு சொல்லுவாயாக.

கூரிட்டவேல்விழிமாதரசேயுன்றன்கோபமெல்லாம்
யாரிட்டவஞ்சனையோவறியேனெனதாரிழையே
ஏரிட்டெங்கென்முகம்பாராமனீயுமிருப்பதினால்
கோரிட்டுஞாயத்தைசொல்லுவன்பாருநன்கோதையரே.

உரை—கூர்மை பொருந்திய வேல்போலும் கண்களையுடைய பெண்களுக்கு நாயகமே! உனது கோபமெல்லாம் யார் சொல்லிக்கொடுத்த வஞ்சனையென்று உணர்ந்திலன், அவ்விடத்தில் என்னை ஏரிட்டுப்பாராமல் இருப்பதால் விவகாரஸ்தர்களைக்கோரி இந்த ஞாயத்தை யெடுத்துரைப்பன் அறிவாயாக.

காத்திருந்தாலுங்கலிதீருமேகண்ணாட்டிமுகம்
பார்த்திருந்தாலும்பசியாருமேயிடபாகமதில்
வீற்றிருந்தாலும்வினைதீருமேமெல்லிகல்லருளைச்
சேர்த்தணைந்தாலும்சிவபோகஞானம்சித்திக்குமே.

உரை—மிருதுவாகிய கண்போன்ற பெண்தெய்வமாகிய சத்திக்காக கார்த்துக்கொண்டிருந்தாலும் மனஆசைதீரும், அவளைப்பார்த்துக்கொண்டிருந்த பசிவிலகும், பக்கமாகவீற்றிருந்தாலும் தீவினைபகலும், அவளது திருவருள்சேர அணைந்தாலும் சிவயோகஞானம் உண்டாகும்.

அற்புதமானகொடியாளரசியணிவரைமேல்
பொற்கொடியேவிட்டுஎப்படிபோவதுபோகவென்றால்
நெற்கடைதூரமொருகாலைத்தூக்கிநிலத்தில்வைக்க
விற்கடைதூரமிழுக்குதென்னாசைவிதிவசமே.

உரை—கொடிபோன்ற இடையையுடைய பாவாய்! உன்னை விட்டு நான் எவ்வாறு பிரிந்து செல்லுவது. அவ்வாறு செல்லவென்றால் என் ஆசை விதிப்பயனாவது என் ஒருகாலை நெற்கடைதூரம் தூக்கிப் பூமியில்வைக்க அக்கால் விறற்கடைதூரம் பின்னுக்கேயிருக்கிறது.

கொக்கேறிவந்த வரசே யிருவருங்கூடவென்றால்
கொக்கோகணவனுங் காவல்வைத்தானந்த கொக்கெழுந்தாற்
கொக்கேகடித்திடுங் கோவேமருகுருங் கொல்லையிலே
கொக்கேயிருக்கின்ற தங்கனம்வந்திடிற் கூடுவனே

உரை—குதிரைமீது ஏறிவந்த அரசனே நாமிருவரும் சேரவேண்டுமென்றால் என்னாயகன் செந்நாயைக் காவல்வைத் திருக்கிறான் அந்தநாய் விழித்துக்கொண்டால் குதிரையைக் கடித்துவிடும் அது இறந்துவிடும் கொல்லைவெளியில் மாமரம் இருக்கிறது அவ்விடத்தில் வந்திடில் சேருவுன்.

போவென்றிரவைச் சிறகாலடித்துப் பொழுதையிங்கே
வாவென்றழைப்பதற்கோ வளர்த்தேன் வர்ணச்சேவலைநான்
தாவென்றவர்க்குத் தருமுருகையன் றடஞ்சிலம்பில்
ஆவென்றவாய்கிழுப்பேன் பொறுத்தேன் வளர்த்தாசைகொண்டே

உரை—வர்ணச்சேவலே! இரவு பொழுதைபோ வென்றும், விடியற் பகலைவாவென்றும் சிறகை விரித்தடித்து கூவுதற்காகவா நானுன்னை வளர்த்தேன் ஆவென்று கூவியவாயை கிழித்து விடுவேன், வளர்த்த ஆசையினால் மனதுபொறுத்தேன்.

மானேயுனக்கென்று நான்பட்டபாடு மறந்துவிட்டாய்
தேனேயெடுத்துச்செப்பவென்று லொருதிங்கள்செல்லும்
கானகம்பற்றும்கடல்நீருவற்றும் கருங்கல்லுருகும்
ஏனேயென்மீது இத்தனைவருமம் ஏந்திழையே

உரை—மான்போன்ற கண்களையுடையமாதே! நான் உனக்காக பாடுபட்டதை நீ மறந்துவிட்டாய் அதை யான் எடுத்துச் சொல்ல வேண்டுமென்றால் கானகம்பற்றும்,கடல்நீர்வற்றும், கருங்கல்லுருகும் என்மீது இவ்வவவு வர்மம் ஏன்சொல்லுவாய்.

நானேயினி யுன்னைவேண்டுவதில்லை நளினமலர்
தேனேகபாடந் திறந்திடுவாய் திறவாவிடிலோ
வானேறணைய விரவிகுலாதிபன் வாயில்வந்தால்
தானேதிறக்குங் கையிதழாகிய தாமரையே

உரை—தாமரைமலரில் வாழ்கின்ற தேன்போலும் இன்சுவையைத்தருகின்ற மொழியையுடைய லட்சுமியை நிகர்ப்பவளே கதவை திறப்பாயாக திறவாவிடில் மேகத்திலிடிக்கின்ற ஆணிடி போன்ற சூரியகுலத்தரசனாகிய நின்கணவன் வாசலில் வந்தால் நின் விரல்களாகிய இதழ்களையுடைய கைத்தாமரையானது தானே திறந்துவிடப்போகின்றது ஆதலால் நான் இனி உன்னைப் பிரார்த்திப்பதில்லை.

இழையொன்றிரண்டு வகிர்செய்தநுண்ணிடை யேந்துவள்ளைக்
குழையொன்றிரண்டுவிழியணங்கேகொண்டகோபந்தணி
மழையொன்றிரண்டுமானுபரணனின்வாயல்வந்தால்
பிழையொன்றிரண்டுபொறாரோகுடியிற்பிறந்தவரே.

உரை—இருபிளவாகச் செய்யப்பட்ட நூலிழையின் ஒரு சிறுகூறுபோன்ற நுட்பமாகிய இடையையும், காதில் அணிந்த குழைகளைச் சென்று தீண்டுகிற இருகண்களையுடைய அணங்கே! நீகொண்டகோபத்தை நீயே தணித்துக்கொள்ள வேண்டும். கைம்மாறுக்குவரக் கொடையாகிய மேகத்தின் குணமமைந்த இரண்டு கைகளையும், மானமாகிய ஆபரணத்தையும் உடையவனாகிய நின்கணவன் வாயில் வந்தால் உயர்குலத்திற்பிறந்தமாதர்கள், ஒருபிழை இருபிழைகளைப் பொறுக்கமாட்டார்களா.

மைக்கிணையான விழிக்கணைகொண்டு மருட்டி யழைத்திடலால்
பொய்க்களவாகப் புகுந்ததுமுண்டு புணர்ந்தது மில்லையடா
கைக்கிசைவான குறுந்தடிகொண்டு கழுத்தைநெரிக்கவரும்
கக்களவாவென் றங்கையடா நீன்றாரமடா விடடா

உரை—அஞ்சனத்துக்கு இணையான கண்களாகிய பாணங்களை கொண்டு என்மனதை மருளச்செய்து பொய்யாகிய களவுப் புணர்ச்சிக்காக அழைத்ததினல் நின்வீட்டில் நுழைந்ததும் உண்டு புணர்ந்ததும் இல்லையடா கைக்கிசைவாகிய குறுந்தடியைக்கொண்டு கழுத்தைமுறிக்கவரும் கைக்கோளனே இவள் என்தங்கையடா உன் மனைவியடா என்னை விடடா.

சேலோகணையோ பிணையோநற் றென்னவன்கை
வேலோநமனே மிளிர்வண்டோ-சாலப்
பளபளென்ற வொளிமிகுந்து பவளமிஞ்சு நகைபுனைந்த
களபகும்பமுலை மடந்தைகண்,

உரை—அதிக பளபளப்பாகிய பிரகாசம்மிகுந்து பவழஆபரணத்தையணிந்து கலவைச்சந்தனம் பூசப்பெற்று குடம்போன்று அழகிய ஸ்தனங்களையுடைய இம்மாதின்கண் வேலாயுதமோ, கருவண்டோ, சேல்மீன்களோ, அம்புகளோ எ-று.

உன்மனதுமென்பனது மோர்மனதா யொன்றிடினே
மன்மதனும் வில்லெடுக்க மாட்டானே-நன்மதிதோய்
குன்றடராந்து பந்தைவென்று கொம்படைந்த தும்பிகுறை
வென்றடர்ந்த கொங்கை மங்கையே,

உரை—அழகு பொருந்திய சந்திரன்படியும் மலையை வென்று பந்தைஜெயித்து கொம்பையுடையயானைவருந்தவெதும்பிநெருங்கின ஸ்தனங்களையுடைய பெண்ணே என்மனமும் உன்மனமும் ஒருமனதானல் காமராஜன் வில்லெடுத்து நம்மை வருத்தமாட்டான் எ-று.

வேலவனேநின் கலவி விந்தையதற்கேற்றமங்கை
கோலவரிக்கண்சுழற்றிக் கொஞ்சுகிளி-போலமுலைக்
கச்சுக்குட் சிக்கச்சொக்கப் பொற்சுட்டிக்கட்டிப்
பச்சைப் பொட்டிட்ட டைப்பார்.

உரை—முருகக்கடவுளே உமது புணர்ச்சிய திசத்திற்கேற்ற இப்பெண் அழகுபொருந்திய ரேகைகளுள்ள கண்களைசுழற்றி கிளிப் பிள்ளையென்று ஸ்தனங்களின்மேலணிந்த கச்சகத்திலுள் அழுந்திக் கிடக்கனம் அகப்பட்டுக்கிடக்கவும் பொற்சுட்டியணிந்து பச்சை நிற பொட்டிட்டிருப்பதைப் பார்ப்பாயாக எ-று.

சங்கநிதியேரகம்வாழ் சண்முகனே நின்மோக
மங்கையெழின் மேனிகளம் வன்மருங்குல்-கொங்கைசெங்கண்
கந்தந்தங்கந் தங்கங் கம்பந் தந்தந்தம்
பந்தந்தந்தண் கஞ்சம் பார்.

உரை—பக்தருக்கு சங்கநிதிபோன்று திருவேரகத்தி லெழுந் தருளிய சண்முகக்கடவுளே உனதுவிருப்பத்தைக்கருதும் இப்பெண் ணின் அழகுபொருந்திய மேனியும் கழுத்தும் குறுகிய இடையும் ஸ்தனமும் சிவந்தகண்களும் முறையே அழகிய தங்கத்தையும் சங் கையும், நூலிழையும் யானைக்கொம்பையும் பந்தையும் தாமரையும் ஒத்திருப்பதையும்பார் எ-று.

கேளந்தநாளையின் மைந்தாநின்னையரைகிட்டிமத
வேள்வந்துபூசலிட மதிகாய வெருண்டெனது
தாள்வந்துபற்றி முன்வாய்புனத்தேநின்று தாழ்மைசொன்ன
நாளந்தநாளல்லவே யிந்தநாளந்த நாயகர்க்கே.

உரை—என்னருமை குமாரனேகேள் அந்த காலத்தில் காமரா ஜன் உன்தந்தையைநெருங்கி யுத்தம்செய்யவும் குளிர்ச்சியையுடைய சந்திரன் சுடவும் இதைக்கண்டுபயந்து என திருப்பாதங்களைப் பிடி த்து என்னெதிரில் வாய்மூடி பணிவான வார்த்தைகளை சொன்ன அக்காலமல்ல அவருக்கு இந்தகாலம் எ-று.

சேமன்புதல்வன் செழுங்குன்றவேலவன் செழுங்கிரியில்
காமன்பகைவன் கரிமுந்துமாகி னங்கைவளவா
பூமன்கணையு மதியுமிவ்வாடையும் பூசலிட
மாமன்றமையன் றகப்பனென்றெவஞ்சி வாடுவளே!

உரை—பாகனே சிவபிரானது குமாரன் திருச்செழுங் குன்றத் திலுள்ள வேலனது பசுமையான மலையின்மேல் இந்திரன் யானையா கிய மேகம் என்னும் வலியபகைவந்து முந்தினால் நம் பெண்ணாகிய

கொடிபோல்வாள் மன்மதன் கணையும் சந்திரனும் டுதென்றலும் சமர் செய்தால் நகுலனுக்கு தமையனாகிய தருமன் (ஏமன்) என அஞ்சி வருந்துவாள் எ-று.

முக்கனியிதழ்க் கொடடாமுற் கதிரையிற்குமரா
மிக்குநறை மிக்கவினி யிக்கமுது-சர்க்கரைரு
சிக்கிலைகசக்குது நிசிக்கலை யுதிக்கிலதில்
அக்கரை பிறக்கு மடடா.

உரை—முருகர் ஸ்தலங்களில் ஒன்றாகிய கதிரையில் எழுந்தருளியிராநின்ற சண்முகக்கடவுளேமுன்னே வாழை, மா, பலா, எனும் முக்கனியின் சுவைபொன்ற அதரபானத்தை கொடுப்பாய் விக்கும்படி தேனினுமினிய கருப்பஞ்சாறும் அதனாலுண்டாகும் சர்க்கரையும் இனிப்பதில்லை கைக்கிறது இரவில் சந்திரன் உதித்தால் அதில் அக்கரையுண்டாகும் எ-று.

நித்தமுநினைத்திரவி நித்திரையு மற்றுருகிச்
சித்தசனெடுத்து வருடித்தகணை-தைத்துருவ
மெத்தமயலுற்று பிரமித்து தலைசுற்றுதடி
தத்தையொரு முத்தமது தா.

உரை—பிரதிதினமும் எண்ணி இராக்காலத்தில் நித்திரையின் றுருகி காமராஜன் எடுத்து சரமாரியாக பொழிந்த அம்புகள் மெத்த தைத்து உருவுவதால் மிகவும் மயக்கங்கொண்டு திகைத்து தலைசுழலுகிறபடியால் கிளியை நிகர்த்த பெண்ணே ஒருமுத்தமாவதுகொடு என்றவாறு.

என்றுதிரும்பி வருவீரெனத்துயி லேந்திழையாள்
நின்றுகுழலொரு கையாலொதுக்கி வெண்ணீறுதந்து
குன்றுநிகர்கொங்கை மீதேயணைத்து கொடுத்தவிடை
ஒன்றுநினைத்தல்லவோ வின்றெனெஞ்சமுருகுவதே.

உரை—என்றைக்குத் திரும்பிவருவீரென நித்திரை செய்துக்கொண்டிருந்த என்நாயகி எழுந்துநின்று தன்கூந்தலை ஒருகையால் விலக்கி விபூதிகொடுத்து மலையைநிகர்த்த கொங்கைமீது அணைத்து கொடுத்த உத்தரவு ஒன்றை நினைத்து என்மனம் உருகுகிறது எ-று.

சீரானவேதபுரிநாதர் கோயிற்றிருகுளத்தில்
நீராடிப்போகின்ற நேரிழையே கியன்றனென்சுவிடாய்
தீராமற்பாம்பற்செவ்வாய் திறவாமற் றிரும்பிமுகம்
பாராமற்போவதனாலே கிடைக்கும் பழியுனக்கே.

உரை—வேதபுரியீஸ்வரரின் கோயில் குளத்தின்நீரில் குளித்து முழுகிப்போகும் பெண்ணே என்மனச்சோர்வை தீராமலும் செவ்வலரிமலர்போன்ற வாயைத்திரக்காமலும் யென்முகத்தைத் திரும்பி பாராமலும் போகுவதால் உனக்கு பழியாகும் எ-று.

சேன்மிஞ்சிப்பாயும் வயற்காஞ்சியூரன் செக்களத்தில்
மேன்மிஞ்சிமையம் பெருமான்மகிபன் வியன்சிலம்பில்
மான்மிஞ்சியான்சொன்ன வார்த்தையுமிஞ்சித் தன்மட்டுமிஞ்சி
கான்மிஞ்சிக்காரன் பின்போனளென விட்டுக்கைமிஞ்சியே.

உரை—சேல்மீன்களை அதிகமாக நிறம்ப்பெற்ற வயழ்பசூல்ந்த காஞ்சிநகரத்தான் போர்களத்தின்மீது மேன்மைப்படும். ஐயம் பெருமாள் மகிபனது பெரியமலையில் ஆசையால் நான்சொன்ன சொல்லைமீறி தன். அளவும்கடந்து எனையுமிழந்து காலில் அணித்திருக்கும் மிஞ்சியுடன்சென்றாள்.

கட்டாரியேந்திய காளத்திநாதர் கனகவெற்பில்
பொட்டான நத்திட்டு போறபெண்ணே நின்பொலன்கலையை
தொட்டால்மணக்கும் புனுகுசவ்வாது கஸ்தூரியுமே
தட்டானடித்த சிமிழ்போன்றனத்தை தருகுவையே.

உரை— சூலாயுதத்தைத் தாங்கிய காளத்திநாதரது பொன்மயமான மலையின்கண் முகத்தில் திலர்தமிட்டு போகும்பெண்ணே உனது பொன்மய ஆடையைத்தொட்டால் புனுகும் சவ்வரதும் கஸ்தூரியும் பரிமளிக்கின்றது கம்மாளன்செய்த சிமிளையொத்த உனது கொங்கையைத் வருவாய்.

மதியேயென்பாங்கி தன்வாசலுளேல் யான்வருமளவும்
சதியேநினைத்தங்குத் தான்போனவயேற்குயில் தான்றெளிக்கும்
கதியேமிகுந்த நற்கன்னற்கதிபன் கணைதொடுப்பான்
பதியேபுக்கிரு சென்றூற்பகைவரும் பாவைக்குமே.

உரை — சந்திரனே நான்வரும் வரையில் என்காதலி வாயிலே அணுகாதே கற்பனையையே நினைத்து அங்குபோகுவையானுல்குயில் சப்திக்கும் காமருஜன் மலர்களையெய்வான் ஆதலால் அவளிடத்திற் குப்போகாமலிரு போனுல் சித்திரபாவைபோன்ற எனது காதலிக்கு அநேகபகைவரும்.

பைங்கிளியென்றிடுமாதே விழியம்புபட்டவெற்குக்
கொங்கையினெக் தடந்தந்தவள்வாய் மருந்தேகொடுத்துச்
சங்கையில்லாமதன்போற் றேர்கடிதடஞ்சாரவைத்தால்
பங்கமில்காமவிடநோய் தணிந்திடும்பாரமன்றே.

உரை — பசுமைபொருந்திய கிளியெனக்கூறும்பெண்ணே உமது தலைவியின் கண்ணுகிய அம்புபட்ட எனக்கு ஸ்தனங்களினுல் ஒத்தடம்தந்து அவளது வாயமுர்தமாகிய மருந்தைக்கொடுத்து வெட்கமில்லநத காமருஜனது அழகிய ரதமாகிய நிதம்பத்தை பொருந்தினுல் பழுகற்றகாமவிஷநோய் தீர்ந்துவிடும் கஷ்டமல்ல.

மையிட்டகூந்தலு மாணிட்டக ணுமதிமுகமும்
கையிட்டகிள்ளையும் வாரிட்டகொங்கையுங் காதினிர்பொன்
செய்திட்டவோலையுஞ் சிற்றடியிட்ட செழுஞ்சிலம்பும்
கைதிட்டமாக வருபவளே யென்னைகாண்கிலையே.

உரை — மேகத்தைநிகர்த்த கூந்தலும் மானைநிகர்த்த கண்களும் பூரணச்சந்திரனைநிகர்த்த நெற்றியும் கையினில்பிடித்தகிளியும் கச்சணியப்பெற்ற ஸ்தனங்களும் காதில் அணிந்த பொன்னுல்செய்திட்ட ஓலையும், சிறியபாதங்களில் அணிந்தசெழுஞ்சிலம்பும் இவைகளுடன் ஒழுங்காக பூணப்பெற்று வருகின்றவளே என்னைப்பார்க்கவில்லையே.

எறிக்குமதிசடை யண்ணுமலைய ரெழிற்கிரியில்
பறிக்கின்றபூவை மிதிக்கப்போமுளந்த பாதத்தினுல்
பொறிக்கண்பிசாசுக ணெற்கணை தூவி பொரிபொரித்துக்
கொறிக்கின்றபாலையி லெப்படிபோயினள் கோமளமே.

உரை— பிரகாசிக்கும் பூரணச்சந்திரனை சடாபாரத்தில் அணிந்ததிருவண்ணுமலையார் அழகிய மலையின்கண் என்பெண் கொய்யும் மலர்களை மிதிக்கப் பொறுக்கமாட்டாள் அந்த பாதத்தினால் நெருப்புப்பொறிகளை வீசும் பிசாசுகள் நெற்களைசிந்தி பொரிபொரிக்குமந்த பாலைநிலத்தில் எந்தவிதமாக நடந்து சென்றாள்.

வேம்பைவிரும்பக் கரும்பானதுமந்த வெங்கரும்பு
வேம்பானதுமுன்னை பெற்றலவோ வெண்ணெய்தான்றிருடித்
தாம்பால்வரியுண்ட மாலரங்கேசர் தடஞ்சிலம்பில்
நாம்பாவியாயிருந்தால் யாரைநோவது நன்றல்லவே.

உரை—வேம்பை விரும்பினதும் அவ்வேம்பு கரும்பாக மாறிவிட்டது அந்த மதுரமான கரும்புவேப்பாகி விட்டது எனெனில் உனைபெற்றதனால் மகனே வெண்ணையைதிருடி கோபியரிடத்தில் தாம்புகயிற்றினால் கட்டுண்டு அடியுண்ட அரங்கேசம்பெருமாளது பெரியமலையில் நான் பாவியானால் யாரைநோவது ஒருவரை நோவது நன்றல்ல.

அடக்கேன்விரகமறியேன் சமயமதாய்ந்து சற்றும்
படுக்கேனொருவரைப் பாரேனிரவு பகன்முழுதும்
எடுக்கேன்மலனா முடிக்கறியேனும்மை யேநினைத்து
வடக்கேவழியையும் பார்த்திருந்தேன் கண்ணுமாசுற்றதே.

உரை. மன்மதவிவிடும் பாணங்களின் வேகத்தால் உண்டாகும்விரகத்தையடக்கமாட்டேன் சமயபேதத்தடதயும் அறியமாட்டேன் அயர்ந்துசற்று துயிலமாட்டேன் ஒருவரையும் ஏறிட்டுப்பார்க்கமாட்டேன் இரவுபகல் முழுதும் மலர்கொய்யமாட்டேன் தலையில் சூடிக்கொள்ளவும் அறியமாட்டேன் உன்னையே நினைந்து வடக்குமுகமாக வழிப்பார்த்து நீவருமையினால் என்கண்ணும் பூத்துவிட்டது.

சின்னஞ்சிறுக்கி நற்சிற்றுடைக்காரி யென்சிற்றிடைச்சி
அன்னநடையுடன் கைவீச்சொன்றே பொறுமைம்பதுபொன்
வன்னமுலையும் வின்னெற்றிதிலர்தமு மார்பழகும்
இன்னம்பெரியர் விலைசொல்லவஞ்சுவ ரேந்திழைக்கே.

உரை, இளம்பருவமமைந்தபெண் நல்லசிற்றுடை தரித்தவள் அழகிய சிறு இடைய உடையவள் அன்னதைப் பழித்தநடையுடன் கைவீச்சு ஒன்றே ஐம்பதுபொன் விலைபெறுமானுல் அழகிய ஸ்தனமும் வில்லைப்பழித்த நெற்றியிலிட்ட பொட்டும் மார்பின் அழகையும் அமைந்த இப்பெண்ணுக்கு இன்னமும் பெரியவர்கள் விலைசொல்ல நாணுவாககள்.

கொத்தோடுமாங்கனி செந்தேனெழுகுங் குருகைவரு
சித்தினிபெண்ணிவ ளன்ணுந்துவிம்மிச் செறிந்திலங்கு
முத்தணிகொங்கையை முன்போலவே முகந்தணைய
எத்தனைநாட்செல்லுமோ வறியே னென்ற னேழைநெஞ்சே.

உரை. கொத்துடன்கூடிய மாம்பழத்தில் செழுந்தேனெழுகுங்குருகாபுரியில் தோன்றிய சித்தினிஜாதிப்பெண்ணுகிய இவளின் அண்ணுந்து பருக்து ஒன்றுடனென்று நெருங்கி விளங்கி முத்தராபாணமணிந்த ஸ்தனத்தை முன்னுள்போலவே கையினுற்தீண்டி தழுவ எத்தனைநாட்கள் பிடிக்குமோ தெரியவில்லையே என் ஏழைநெஞ்சே.

நெஞ்சீரம்வற்றியுள்வாய்வறண்டுநினைவுதப்பி
என்சீவனும்விட்டும்போகுதையோவிளமாமயிலே
வஞ்சிக்கொடியிடைப்பெண்ணுள்குமுதநல்வாயமுதச்
சஞ்சீவிகொண்டுவந்வாள்பிழைப்பேனினிச்சாவில்லையே!

உரை— மனதிலுள்ள ஈரம் காய்ந்து உள்வாயுலர்ந்து நினைவுபிசகி என் உயிரும் என் உடலைவிட்டு நீங்கப்போகிறது ஐயோ! இளமை பருவமமைந்த அழகிய மயிலைநிகர்த்து வஞ்சிக்கொடிபோல இடையையுடைய பெண்ணின் குமுதமலரைப்போன்ற அழகிய வாயிலுண்டாகிய அமிர்தமான சஞ்சீவியைக் கொண்டுவந்து கொடுத்தால் நான் உயிர் பிழைத்துக்கொள்ளுவேன் பிறகு எனக்கு மரணமேகிடையாது.

மங்காதகீர்த்தியன்றுண்டவராயண்மகிபன்வெற்பில்
சங்கீதவல்லியைமார்போடணைத்துசாசஞ்செய்ய
இங்கிதமாகவிருவருங்கூடியிருக்கையிலே
[illegible]ங்கோதவாரியின்மீதேநிலவுபுறப்பட்டதே.

உரை—அழகிய பெருமையையுடைய தாண்டவராயனது மலையில் சங்கீதத்தில் சமர்த்துடைய இவனை மார்புறத்தழுவி சரசம் செய்து இருவருமாக கூடியிருக்கையில் பொங்கு அலைகளையுடைய சமுத்திரத்தின்மீது சந்திரன் உதித்தான்.

விடவாளைவென்றவிழியாளைப்பூமியின்மேலதிர
நடவாளைப்பெண்கள்நாயகமாமொருநாயகத்தை
மடவாளையென்னுள்வதிவாளையினபவருவவெனசொற்
கடவாளையென்றெய்வமேயென்றுபோயினிக்காண்பதுவே.

உரை....விஷந்தோய்ந்த வாளைஜெயித்த கண்களையுடைய பெண்ணை, பூமியதிர நடவாதவளை. பெண்களுக்கெல்லா மரசியை மடப்பத்தையுடையவளை, என்மனதில் சதாகுடிகொண்டிருப்பவளை, இன்பம் தணியும்படி என்சொல்லை மீறிநடக்காதவளை நானினிபோய் பார்ப்பதெப்போ.

நாடாதுநாடினையோகல்விகேள்விநலமிலர்பால்
ஊடாடிநெஞ்சந்தளர்ந்தனையோவொன்னலரையெல்லாம்
காடாளவைத்தவன்மால்கருமாணிக்கன்கற்பவெற்பில்
வாடாதுவாடினதேன்மன்னவாநின்வரைப்புயமே.

உரை. விரோதியான யாவரையும் காட்டையாளும்படி வைத்தவன் பெரிய கருமாணிக்கன் அழகிய மலையில் வேந்தனே உமது மலைநிகர்த்த தோள் ஒரு காலத்திலும் வாடாதது இப்போது வாடியிருப்பதேன் கிட்டாததை கிட்டினையோ கல்வி கேள்வியில் பிரயோஜனமில்லாதவரிடத்தில் பழகி மனம்வாடினையோ.

தாராளனெங்கடிருநின்றசேஷன்சயிலத்தின்பால்
நீரார்முகிற்குழன்பெண்பேதையைவிட்டுநீபிரிந்தால்
சீராமனில்லையமுதில்லையஞ்சனைச்செல்வனில்லை
காரார்பொழில்வளர்காழிப்பிரானில்லைகாப்பதற்கே,

உரை. மலர்மாலைசூடிய எமது திருநின்றைசேஷனது மலையில் மேகத்தை நிகர்த்த கூந்தலையுடைய பேதைமதியாகிய என்பெண்ணைவிட்டு நீ பிரிவாயாகில் அவளை (இறவாமல்) காப்பாற்றுவதற்கு கல்லை பெண்ணாக்கிய ஸ்ரீராமபிரானில்லை, சஞ்சீவி மலையைக்கொண்டு

வருவதற்கு அஞ்சனதேவியின் குமாரனான ஆஞ்சநேயரில்லை, எலு ம்பை பெண்ணாக எழுப்பிக்கொடுத்த மேகங்கள் தங்கிய சோலைகள் சூழும் சீர்காழிக்கு தலைவனாகிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிக ளில்லை.

கைத்தலந்தன்னிற்பசும்பொன்வளையல்கலகலென
சத்தமெலிந்திட நூபுரம்பாதச்சதங்கைகொஞ்சத்
தத்திமியென்றுகடனஞ்செய்சம்மீசர்தஞ்சசந்திப்பெண்
செத்தகுராங்கைதலைமேற்கமந்துதிரிந்தனளே.

உரை. அஸ்தத்திற் பொன்னாற்செய்த கைக்ங்கணங்கள் கல கலவென்று சப்திக்க பாதச்சிலம்பும் கிண்கிணியும் சிறு ஒலிசெய்ய தத்திமியென்று நாட்டியம்செய்கின்ற சம்பீசரதுசந்திப்பெண் செத் தகுரங்கை (சாமந்தியை) தலைமேற்றாங்கித் திரிந்தாள்.

கட்பூங்குழல்மாவடுவண்டாய்கழைவிற்புதல்கூரகிநாட்டம்
எட்பூத்துண்டமுருக்கோட்டமிலகுவிதுவாகநம்பாணி
தடபூச்சுவர்க்கஞ்சிலம்பியிடைநூணிதம்பமகில்பைவராற்றுள் சொல்
வெடபால்குரல்கோகிலமன்னநடையும்வடமீன்கற்புடையாள்.

உரை. நேணியுள்ள பூங்குழல் அழகிய வண்டுபோல புருவம் கரும்புவில்லை நிகர்க்கும் கண் கூர்மைபொருந்திய வாளைநிகர்க்கும் நாசியோ எள்பூப்போலிருக்கும் அதரம் முருக்கம்பூப்போ லிருக்கும் முகம் பூரணசசந்திரனைப்போலிருக்கும் கை தாமரைபுஷ்பத்தையொ க்கும் ஸ்தனம் மலையைப்போலிருக்கும் இடையானது நூலிழையை ப்போலிருக்கும் நிதம்பம் பாம்பின் படம்போலுள்ளது கணைக்கால் வரால் மீனைப்போலுள்ளது சொல் வெண்மைபொருந்திய பாலின் சுவைபோலுள்ளது குரல் குயிலைநிகர்க்கும் நடை அன்னத்தைப்பழி க்கும் இத்துடன் அருந்ததிபோன்ற கற்புக்கரசி,

ஆராகுஞ்செஞ்சடைஅம்பலவாணரணிவரைமேல்
நீராடிப்போகினறகேரிஸழயேயந்திநேரத்திலே
சீராடிக்குங்குமக்கொங்கையைக்காட்டிசிரித்தொருபெண்
போராள்பிடிபிடியென்றேநிலவுபுறப்பட்டதே.

உரை. கங்கையையணிந்த செஞ்சடையுடைய அம்பலவாணர் அழகிய மலைமீது நீரில் மூழ்கி குளித்துப்போகும் பெண்ணே அந்தி நேரத்தில் சிராடி குங்குமமணிந்த கொங்கையைக்காட்டி நகைத்து ஒருமாது போகிறுள் அவளை பிடிபிடி என்று சந்திரன் தோனறியது.

வண்டுறைசோலைமலைப்பரிகாரிவந்தாலிவளுக்
கண்டுபடாதவிக்காமசுரம்விடுமாதலினல்
பண்டுபழகினர்போலிந்தவேளையிற்பாயசத்தைக்
கொண்டுவந்தீரிதிற்றோஷப்பிறந்திடுங்கோதையரே.

உரை. வண்டுகள் வாழ்கின்ற மகாவிஷ்ணுவின் சோலைமலையில் வைத்தியன் வந்தால் இவளுக்கு கட்டுப்படாத காமாமாக்கினி விலகும் ஆதலால் பழகினவர்கள்போல இப்போது பாயசத்தைக் கொண்டுவந்தீர் இதனல் தோஷமாகும் மாதரே.

பாய் அசம் ஆடு, சோலைமலை பரிகாரி அழகர். அழகர் வந்தால் என் காமாக்கினி றணியும் இந்த ஆட்டை கொல்வதால் தோஷமுண்டாகுமென்பது.

காண்சிலையென்றிடுங்காமனைநீநருமென்கட்டழகா
ஆணரசேயெனைக்காணவருபவளாயிரம்பொன்
வேணமட்டுங்கொணர்ந்தேகுவாநீயுங்வ்வாறுசெயின்
வாணகையோடுனைச்சேர்ந்தின்பம்மீகுவன்மானவனே.

உரை. பார்க்கவில்லை யென்று சொல்லும் காமனைப்பழித்த கட்டழகு உடையவனே, ஆடவர்க்கு கோவே என்னைப்பார்க்க விரும்பிவருபவர் ஆயிரம்பொன்னை நான்விரும்புவரையில் கொண்டுவந்து கொடுப்பார்கள் நீயும் அப்படி கொண்டுவந்து கொடுப்பாயாயின் பெருமையுள்ளவனே பிரகாசம்பொருந்திய நகையுடன் உன்னைக்கூடிக் கலந்துசுகந்தருவேன்.

மானேயென்னோடுயர்சத்தியமாய்ச்சொன்னவார்த்தையைநீ
தேனேமறந்துதியங்கவைத்தாயதுதீங்கலவோ
வானேர்புதுவைநற்காளத்திநாதர்வரையணங்கே
நானேவலியவந்துன்குறைதீர்ப்பனறுங்கிளியே.

உரை. மானை நிகர்த்தவளே! என்னுடன் மிகுந்த உண்மையாகச்சொன்ன வாக்கியத்தை தேனிலும் இனியவளே மறந்து எனை திகைக்கும்படி செய்தாய், அப்படி செய்தது தீங்கு அல்லவோ மேகத்தை நிகர்த்த புதுவையில் எழுந்தருளியிருக்கும் அழகு மிகுந்த காளத்திநாதரது மலையிலுள்ள பெண்ணே, கானே வலியவந்துன் குறையை தீர்த்திடுவேன் நல்ல கிளிபிள்ளையை நினைத்தவளே.

ஆடுஞ்சிதம்பர னம்பலவாணவ னணிவரைமேல்
நீடுங்கயற்கண்ணி ளுடந்தமோக நிறைப்வென்றும்
கோடுங்குளமுங் குளத்தருகேநின்ற குன்றுகளும்
காடுஞ்செடியு மவளாகத்தோன்று மென்கண்களுக்கே.

உரை. திருநடனம்புரியும் அம்பலவர்ணரது அழகியமலையின் மீது நீண்ட கயல்மீனைப்போன்ற கண்களையுடையவள் கொடுத்த சுகம் என்னிடத்தில் நிறம்பி யிருப்பதால் கோடும் குளக்கரைகளும் குளங்களும் குளத்திற்கு அருகே நிற்கும் மலைகளும் காடுகளும்செடிகளும் என்கண்களுக்கு அவளாகத் தோன்றுகின்றது,

போரேற்றுவந்த மதன்படைக்கஞ்சி புகுந்தவெனைக்
காரேற்றிநீல்க் கருங்கடலேற்றி கனத்தகொங்கை
மேரேற்றியுந்திச் சுழியாற்றிலேற்றி விரகவல்கில்
தேரேற்றிக்காக்குந் திருவையென்றோகண்டு சேர்குவதே.

உரை. சமர்விளைக்கவந்த காமனது மலர்க்கணைக்குப் பயந்து வந்து அடைக்கலமாக புகுந்த என்னைக்கருணையுடன் பெருத்த ஸ்தனமானமலைமீதேற்றி உந்தியாகிய சுழியாற்றிலேற்றி காமவிரகத்தையுண்டுபண்ணும் அல்குல்லாகிய ரதத்தின்மீதேற்றி காப்பாற்றும் லக்ஷிமியைப் போன்றவளைப்பார்த்து மகிழ்வது எந்தநாளோ.

பொல்லாதமதப்பய லெங்நேரமுஞ்செய்யும் போருமெனை
கொல்லாமற்கொல்லு மதியுங்கடலுங் குயினுமிவை
எல்லாந்தொலைந்த வென்றெண்ணினன்பாவியிப்போதுன்மனம்
கல்லாயிருக்குமென் றெவ்வளவே னு முன்கண்டிலனே.

உரை. பொல்லாத காமன்செய்யும் சமருங்கொல்லாமற் கொல்லும் சந்திரனும் சமுத்திரமும் குயிலுமாகிய இவைகளெல்லாம்நீங்கிவிட்டதென்று எண்ணியிருந்தேன அடிப்பாவி யுன்மனம் கல்லாகயிருப்பதை நான்முன்னமே அறியவில்லையே.

அஞ்சனத்தையணிவிழிமான்மயிலைவிநாயகதுரைமே
லாசையாலே
நஞ்சனத்தையும்விடுத்தாளுன் சமைத்துத்தருமினிய
நலத்ததீம்பால்
மிஞ்சனத்தையும்வெறுத்தாள் வன்குவளைத்தாரினையே
வேண்டுகின்றாள்
கஞ்சனத்தையலையிவ்வா றலைய வமைத்தானெனின்யாற்
கருதலென்னே.

உரை, மையணிந்த கண்களையுடைய என்பெண்மயிலை விநாயகதுரையின்மேல் மையல்கொண்டு நமது பந்துக்களைவிடுத்தாள் நான் சமைக்கும் இனிய பால்மிகுந்த சாதத்தையும் வெறுத்து குவளைமலர்மாலையையே விரும்புகின்றுளாதலால் அவளை இப்படிநடக்க பிரமன்செய்தானுல் கம்மால் செய்து முடிப்பதுயாது.

சோமன்பதியுந் திருமால்பதியுந் துலங்குகொன்றைத்
தாமன்பதியு நின்பங்கில்வைத்தாய் தமியேன்புகழும்
வீமன்புகழ்கொண்ட விக்ரமச்சோழன் வியன்சிலம்பில்
காமன்பகைவன் பதியோவென்பங்கின் கடைபிரிவே.

உரை. சோமன்பதியாகிய முகத்தையும் திருமால்பதியெனும் வயிற்றையும் பரமன்பதிமாகிய ஸ்தனத்தையுந் உனதுபக்கம் வைத்துக்கொண்டாய் நான் புகழும் வீமனுடைய புகழ்படைத்த விக்கிரமசோழனது பெரியமலையில் இந்திரனுக்கு உரைவிடமாகிய மேகத்தைநிகர்த்தகூந்தலைஎன்பக்கம் வைத்தாய்.

கிளியென்றுசொல்லியகாதலனேயோன்றுகேட்டிடுதி
எளியவளாகியயான்செய்தகுற்றமென்னேந்திழையார்
பழிபலசொல்லவும்நின்னுசையானதும்பாலனமும்
தளியுனையேநினைந்தல்லும்பகலும்தவிக்கின்றேனே.

உரை. கிளியென்றுரைத்த என் நாதனே ஒரு செய்திகேள் ஏழையான யான்செய்த பிழை ஏன்ன பெண்மார்கள் பல பழியான வசனம் கூறவும் உனது ஆசையினால் நல்ல வாசம்பொருந்திய பாற் சாதமும் தள்ளி இரவும் பகலும் உன்னையே நினைந்துதவிக்கின்றேன்.

தவிக்கின்றகாரணமேதோயான்செய்திட்டதாழ்ச்சியென்றோ
புவிக்குட்சிறந்திடுங்காளத்திநாதர்புதுவைவெற்பில்
தவிக்கின்றவெண்முலைமாதேமறக்கிலன்சாற்றுமென்னைக்
கவிக்கின்றமாமயல்தீரமருந்தொன்றுகாட்டுவையே.

உரை. தவிப்பதற்குகாரணம் யாதோநான் செய்தகுறையாது பூலோகத்தில் உயர்ந்திடும் காளத்திநாதரது புதுவைமலையில் தவித்துக்கொண்டிருக்கும் மெல்லிய ஸ்தனமுடைய பெண்ணே நான்மறக்கேன் சொல்லும் என்னை மூடிக்கொண்டிருக்கும் காமசுரம்தீர மருந்தொன்றை காட்டுவாய்.

காட்டுமருந்திது காலமென்றே யென்றன்காதலனைக்
கூடியபின்புனைக் கூடுவதற் கொருகுற்றமில்லை
நாட்டும்புகழ் புதுவாபுரி காளத்தி நாதர்வெற்பில்
பாட்டுக்கிறைவனே மறவேனுனைப் பல்தினமே.

உரை—மருந்தைக் காட்டுவதற்கு இதுவல்லகாலம் என்நாதனை கூடியபிறகு உனைசேர்வதற்கு ஒருகுற்றமும் இல்லை நிலைபெறுத்தப் பட்ட புகழையுடைய புதுவைநகரின் காளத்திநாதரின்மலையில் உள்ள பாட்டுக்குகந்தவனே உனை என்னாளும் மறவேன்.

மறந்தனையான்சொன்ன வாசகந்தன்னை மதர்விழியாய்
சிறந்தழைக்கும் புதுவாபுரி காளத்தியப்பன் வெற்பில்
உறந்தருநம்மிரு வோருயிரொன்று டலிரண்டாய்
திறந்தரநின்றதை நோக்கினவரெவர் தேன்மொழியே

உரை—மதாத்தகண்களை யுடையவளே! நான் சொன்னவார்த்தையை மறந்துவிட்டாய் தருமம் செழித்தோங்குகின்ற புதுவா புரியில்வாழும் காளத்தியப்பன்மலையில் உருதியைத்தரும் நம்மிருவர் உயிர் ஒன்றாகவும் உடலிரண்டாகவும் திரமாக நின்றதை நோக்கியவர் யார் இனியசொல்லையுடையவளே.

தேமொழியேநிற்குச்சொன்ன நற்புத்தியைதேறுகிலாய்
போமொழியெங்கணும் போவதுசெய்தனை போதவுமே
நீமதமாகிய யின்னமுஞ்செய்ய நினைகுவையேல்
தாமதமின்றிக் கொடுந்தீங்கடைகுவை சாற்றினனே.

உரை—நான் உனக்குச்சொன்ன நல்லபுத்தியை தெரிந்துக்கொள்ளவில்லை போகுமிடமெங்கும் போனாய் நீ மதங்கொண்டு இனிமேலும் அவ்விதமாக செய்ய நினைப்பாயானால் தாமதமில்லாமற்படி சீக்கிரமாக கொடியதுன்பத்தை அடைவாயென்று சொன்னேன்.

இளந்தத்தையேநல்லமுத்ததையேபுசித் தென்கரத்தில்
வளர்ந்தத்தையாது முணர்ந்திலையே மயலாகிமனந்
தளர்ந்தத்தையேயென் றிருவரங்கேசர்க்கு சாற்றச்சொன்னால்
அளந்தத்தையே யளந்தாய் பின்னையாது மளர்ந்திலையே.

உரை—இளமைபொருந்திய கிளியே நல்லபாலையுண்டு என் கரத்தில் வளர்ந்ததை சிறிதளவாவது நினைக்கவில்லையே மோகமாகிமனம்வாடியதை என் திருவரங்கநாதருக்கு சொல்லும்படி சொன்னால் சொன்னதையே சொன்னாய் மற்றொன்றையும் சொல்லவில்லையே.

தேவெனவேந்தர் பணிமுருகையன் றன்னென்சிலம்பில்
ஓவெனத்தேறிப் பிரிவுசொல்வே னொருநாளிரவில்
காவெனவன்றின் பெடைகூவிடக்கை நெகிழ்க்குமுன்னே
ஆவென்றலறிப் பதைத்தனளேயந்த வாயிழையே.

உரை—வேந்தர்கள் தெய்வமாகவெண்ணி தொழும் முருகையனது பொதிகமலையில் இது தருமென்று துணிந்து எனது பிரிவைத் தலைவிக்குச் சொல்வேனானால் அந்த பெண் ஒருநாளிரவில் அன்றிற்பேடைகள் காவென்று அரற்றினவுடன் அதை யோட்டுவதற்காக தன்னை யிருகத்தழுவின கைகளை நெகிழ்க்குமுன்னே ஆவென்றலறி யழைத்தாளே அவளிடம் என்பிரிவை எப்படிச் சொல்லுவேன்.

சாற்றினேனின்மேலுள்ளவன்பினுவிதைத்தாழ்குழலே
போற்றுவைசீயுமென்பாலன்புளையெனிற்போதானகாம்
ஆற்றலுறும்புதுவாபுரிகாளத்தியண்ணல்வெற்பில்
தூற்றினையாயினின்மேலுறுமன்புதொலைவுறுமே.

உரை—நீண்ட கூந்தலையுடையவளே, உன்மீதுள்ள அன்பினால் இதைச் சொன்னேன். என்னிடம் நீயும் அன்புவைத்து இருப்பவளானால் நீயும் அங்கீகரிப்பாய். அப்படி அங்கீகாரம் செய்வாயானால் மிகவும் நன்மையுண்டாகும். ஆற்றல்மிகு புதுவைநகரில் வாழும் காளத்திநாதனது மலையில் தூற்றினையானால் உன்மீதுள்ள அன்பு நீங்கிப்போகும்.

வண்டுமதுவுண்டிசைபாடுஞ்செந்திலின்மாரன்வரக்
கண்டுமிருந்தும்வடிவேலிரண்டுங்கருப்புவில்லும்
குண்டுமருந்தும்பொற்றேருந்தராமற்குழலைதந்தால்
தண்டுகொண்டெப்படிவென்றிடலாமடிதாழ்குழலே.

உரை—வண்டுகள் தேன்குடித்து இராகம்பாடுதற்கு இடமாகிய திருச்செந்தூரில் காமன்வரப் பார்த்திருந்தும் வேல்களிரண்டையும் கம்பு வில்லையும் குண்டுமருந்தும் பொன்தேரும் கொடாமல் குழலையைக்கொடுத்தால் அடிநீண்ட கூந்தலையுடையவளே சேனைகளைக்கொண்டு அவனை எப்படி ஜெயிக்கலாம்.

குண்டு-கொங்கை, கரும்புவில்-புருவம், வேலிரண்டு-கண்கள் மருந்து-அதாமிர்தம், தண்டு-கோசம்.

அழலைத்தரித்ததிருவிரிஞ்சேசரணிவரையில்
மழலைச்சுரமெனும்மந்த்ரோதயமுமணிமருந்தும்
தழலைப்பொருதியபாம்புங்குடமுந்தராமல்வெறுங்
குழலைத்தந்தாலினிப்பாம்பாட்டுவதெங்ஙனகூறுதிரே.

உரை—சூரியனைச் சூடிய திருவிரிஞ்சை யிறைவது அழகிய மலையில் மழலைச்சுரமான மந்த்ரோதயத்தையும் மணிமருந்துகளையும் அக்கினிபொருந்திய பாம்பும் குடத்தையும் தராமல் வெறுங்குழல் மட்டும் கொடுத்தால் இனி பாம்பையாட்டுவது எப்படி சொல்லும்.

மழலை சுரம்-மழலைச்சொல், குழல்-கூந்தல், மணி மருந்து-அதராமிர்தம்.

அறங்காட்டிபகரத்தைவேலசதியணிவரையில்
நிறங்காட்டுங்கஞ்சத்திருவருளையீர்முசுநீண்டகுமிழ்த்
திறங்காட்டும்வேலுஞ்சிலையுங்கொல்யானையுந்தேருங்கொண்டு
புறங்காட்டவுந்தகுமோசிலைகாமன்றன்பூசலிலே.

உரை — தருமங்களைச் செய்யும் கைகளையுடைய ஐவேல் சதி யென்பவனுடைய அழகியமலையில் ஒலிகாட்டும் செந்தாமரைமலரில் வாழும் லக்ஷிமியைப்போன்றவரே முகத்தினிடம் நீண்டகுமிழம்புஷ் பத்தின் வர்ணத்தைக்காட்டும் வேலும் வில்லையும் கொலைபுரியும் யானையையும் ரதமும்கொண்டு கரும்புவில்லையுடைய காமருஜனது சமரில் தோல்வியடையக் கூடுமோ.

யானை, ஸ்தனம், குமிழ், நாசி, வேல், கண், தேர் கடிதடம் சிலை புருவம்.

ஏழைக்கிரங்கிடும் வான்மீகநாத ரெழில்வரையில்
யாழைவருத்துமொழி மடவீர்நல்லனமிருக்க
வாழைவருக்கைக் கனியிருப்பாற் குடம்வைத்திருந்தும்
கூழையெனக்களித்தீர் மறுமாற்றங்கொடுத்திடுமே.

உரை — ஏழைகளுக்கு அருள்சுரக்கும் வன்மீகநாதரது அழகிய மலையின்கண் வீணையைத்தோர்க்கும் மொழியையுடைய பெண்ணே நல்ல அன்னமிருக்க வாழைத்தண்டு பலாக்கனி இருண்டுபாற்குடங்கள் வைத்துக்கொண்டிருந்தும் கூழை எனக்குகொடுத்தீர் இதுயாதுக்கு மறுவார்த்தை கூறும்.

அப்பளவெவ்வளவே விழியார்ந்தகொவ்வைச்
செம்பளமெவ்வளவே விதழ்சீர்கொள் வஞ்சிக்
கொம்பளவெவ்வள வவ்வளவேயிடைக் கூறெலுமிச்
சம்பளமெவ்வள வவ்வளவே தனந்தையலுக்கே

உரை — இந்தப்பெண்ணுக்கு கண் அம்பினது அளவு எவ்வளவோ அவ்வளவே அதரம் நிறைந்த கோவைப்பழத்தின் சிகப்பு எவ்வளவோ அவ்வளவுதான் இடை சிறப்புற்ற வஞ்சிக்கொடி எவ்வளவு அளவுடையதோ அவ்வளவே ஸ்தனம்சொல்லும் எலுமிச்சம்பழம் எவ்வளவோ அவ்வளவே.

போமேபொழுதுவருமே மதியும் புரண்டெனங்கம்
வேமேமதனன்சாங்தைக்குமே தைத்தபுண்வழியிற்
பூமேவுதென்றல்புகுமேயென் பெண்புத்திபோய்விடுமே
கோமேதகப்பயலே மழவ‑ப் பள்ளிகொண்டவளே.

உரை – கோமேதகத்தை நிகர்த்தமேகமே மழவனே பள்ளிகொண்டவனே பகற்பொழுது போகுமே சந்திரனும் பிரகாசிப்பானே என் அங்கம் வேகுமே காமன் பாணங்கள் தாக்குமே தாக்கிய புண் வழியே தென்றற்காற்று நுழைந்துபோகுமே என் பெண்புத்திமாறி விடுமே நான் யென்செய்வேன்.

சூலேறிச்சங்கமடவார்குடையுந்துறைக்கொதுங்கி
வேலேறுங்கண்ணியர்கைக்குடநீர்புக்குமீண்டுமுழும்
சாலேறிமுத்தந்தனையீறுந்தன்வயலூரானம்பால்
மாலேறுவான்பரிமாவேறினானடிமாமயிலே.

உரை—சங்குகள் கர்ப்பமுதிர்ந்து மாதர் மூழ்குகின்ற துறையில் ஒதுங்கி வேலைநிகர்த்த கண்களையுடைய அம்மாதாது கைக்குடத்தில் ஜலம்புகுந்து மறுபடியும் உழுபடைச்சாலேறி முத்துகளைப்பெறும் வயல்சூழும் ஆரையுடைய நாயகன் நம்மிடம் காமம் பூர்க்கும் பொருட்டு குதிரை ஏறிவந்தவன் அடி அழகு பொருந்திய மயிலை நிகர்த்தவளே.

ஞாயிறுபோய்விழத்திங்கள்வந்தெய்திடநண்ணியசெவ்
வாயனல்தூவப்புதனம்புகாநல்வியாழம்வர
மேயருவெள்ளிக்கலைசோரநானுன்னைமேவுதற்குத்
தாய்சனியாயினளேரகுநாததளசிங்கமே.

உரை – ஆதித்தனாகிய வெய்யோன் மேற்கு கடலில் போய்விழவும் சந்திரன்வந்து பிரகாசிக்க அங்காரகன் அனலைவீச புதன் அம்புபோல் சுட நல்ல வியாழன்வர பெரிய வெள்ளியினால் ஆடை நெகிழ நான் உம்மைக்கூடுதற்கு என் தாய் சனிபகவான்போல் இருக்கின்றாள் ரகுநாத தள்வாயாகிய சிங்கமே.

ஆலங்குடியர்சங்கஞ்செறியத்தாஞ்சக்கார்பொன்
மேலம்பரத்தினர்நாகமெடுத்தவர்மேவிடையர்
சூலங்கண்மெய்யினர்பார்பதிகோன்மதிதோய்கவனர்
பாலன்கைக்கோள்படைக்கூர்மைக்கண்ணுயிர்தலைபர்தொடிக்கே.

உரை—திருவாலங்குடியிலெழுந்தருளியவர்கங்கணமணிந்தஇடப்பாகத்தையுடையவர் ஸ்ரீபஞ்சாக்ஷரத்தையுடையவர் அழகுபொருந்தியஉயர்வான சிதாகாசத்தையுடையவர் பாம்பைத்தரித்தவர் மேன்

மைபொருந்திய இடபவாகனத்தையுடையவர் சூலப்பெருமைபொருந்தியவர் நித்தியர் பார்வதிநாயகர் சந்திரனைத்தாங்கிய சடாபாரத்தையுடையவர் அவரது பாலசுப்பிரமணியர் கையிலுள்ளவேலாயுதத்தை நிகர்க்கும் கூர்மையையுடைய கண்களோ பசும்பொன்னால் செய்யப்பட்ட கங்கணமணிந்த இந்த மாதுக்கு.

கலையளவெவ்வளவவ்வளவாம்விழிகாமநுடைச்
சிலையளவெவ்வளவவ்வளவாநுதல்செந்தில்கந்தன்
மலையளவெவ்வளவவ்வளவாமுலைமாறுயிலா
விலையெவ்வளவாவவ்வளவாமுலையேந்திழைக்கே,

உரை—இப்பெண்ணுக்கு கண்கள் மனின் அளவு எவ்வளவோ அவ்வளவே நெற்றி காமனின் வில்லெவ்வளவோ அவ்வளவே ஸ்தனங்கள் திருச்செந்தூர்வாழ் முருகனது மலையெவ்வளவோ அவ்வளவே வயிறு திருமால் படுக்கும் ஆலிலை வெவ்வளவோ அவ்வளவே.

காயுங்கடுஞ்சுரமீதென்றுகாட்டியகையுஞ்சொன்ன
வாயும்புகையெழும்பாலையிலேவணங்கார்மவுலி
தோயுங்கழற்பதச்சுந்தரபாண்டியத்தோன்றல்வெற்பில்
தாயுந்தவருமிலாதவர்போலதவித்தனளே.

உரை—வணங்காதவர்களுடைய கிரீடங்கள் படியும் வீரக்கழலையணியும் பாதங்களையுடைய சுந்தரபாண்டியனது பெரிய மலையில் சுடும் கடுமையான பாலைநிலம் இதுதானென்று சுட்டிக்காட்டின கையும் சொன்ன வாயும் புகையெழும்பும் பாலைநிலத்திலே தாயும் உறவினரும் இல்லத்தவர்கள்போல் தவித்தாள்.

தேமன்சுதனுக்கிளையோன்பிதாவைத்திரிகியினால்
கோமன்மறைத்துவிசயனுயிரைக்கொடுத்ததுபோல்
காமன்பகைவன்றென்கூடற்சொக்கேசன்கனகிரிமேல்
வீமன்சுடரொளிநம்மாருயிர்மீட்டதுவே.

உரை—இந்திரன் குமாரனாகிய வாலிக்கு இளையவனாகிய சுக்கிரீவனது தந்தையாகிய சூரியனை கிருஷ்ணன் மறையும்படிச்செய்து வில்விஜயனது உயிரைக்காத்தது மன்மதனுக்கு பகைவனாகிய தென் மதுரைச் சொக்கநாதரது பெரிய மலையின்மீது வண்டினது விளக்கொளியைநீக்கி நம்முடைய அரிய உயிரை காத்தது.

கடுவளைக்குங்கண்ணிகாரென்றபோதினிற்கைகழன்று
விடுவளைக்குள்ளவிசையிலையேமிதிலைச்சிலையே
நடுவளைக்குங்கொண்டனாரணன்கேரளநாட்டிலண்டத்
தொடுவளைத்தும்பரித்தேர்வலவாநமதூர்பரிக்கே.

உரை—விஷத்தின் தன்மையை தன்னிடத்திற்கொண்ட கண்க ளையுடைய காதலி கார் என்ற மட்டில் அவள் கையிலுள்ள கங்கணத் திற்குள்ள விசை மிதிலநகரத்திருந்த சிவன்வில்லை நடுவிற்பிடித்து வளைத்த மேகவண்ண நாராயணரது கேரளநாட்டில் அண்டங்களை யெல்லாம் சுற்றிவரும் குதிரைகளைப்பூட்டிய தேர்பாகர் நம்மால் ட்டுடப்படும் குதிரைக்கு இல்லையே.

பேயோவெயினரமுதாலயத்திற்பிறந்தவுன்னை
யேயோதினைப்புனங்காவல்வைத்தாரெழுபாருமுண்டோ
வாயோன்றிருவுந்திபூத்தோரணங்கண்மணிவரையில்
ஆயோவெனுங்குரலந்தோபுனத்தையழிக்கின்றதே.

உரை- பாற்கடலிற்பிறந்த உன்னைத் தினைப்புனத்திற்கு காவ லாகவைப்பதற்கு ஏழுலகையுண்ட பெருவாயையுடையவன் திருவுந் திபூர்த்தோன் திருவரங்கன் அழகிய மலைமீது நீ ஆயோவென்று ஆயாலோட்டுங் குரலானது புனத்தை நாசமாக்குகின்றதே உன் இனிய குரலோசையை அறியாத குறவர்களுக்கு பேய்பிடித்திருக் கின்றதோ.

நரிக்குப்பொருளை யுபதேசம்செய்தந் நரிகளைப்பின்
பரிக்குச்சரிதந்த வம்பலவாணர் பணிவரைமேல்
முருக்கிற்சிவந்த விதழமுதுண்டு முகமிரண்டும்
நெருக்கிப்பிடித்து விளையாடநல்ல நிலவிதுவே

உரை—நரிகளுக்கு மெய்ப்பொருளை யுபதேசம்செய்து அந்த நரிகளை பின்குதிரைகளுக்கு பதிலாகத்தந்த அம்பலவாணரது அழ கிய மலையில் முருக்கம்பூவினும் சிவந்த அதரத்திலுண்டான அமிர் தத்தை குடித்து இரண்டு முகத்தையும் நெருக்கிப்பிடித்து விளை யாட நல்லநிலா இது.

மார்க்கட்டாதபருவமடா விளவஞ்சிக்கொடி
பூர்க்கட்டடா மதம்பொங்கட்டடா மதம்பொங்கி பொங்கி
வேர்க்கட்டடா தனபாரமிரண்டும் வெளியிலெட்டிப்
பார்க்கட்டடாநீ பொறடா பராக்கிரமபாண்டியனே.

உரை —வல்லமைபொருந்திய பாண்டியனே ஸ்தனங்கள் அடிகோலாத பருவமடா இளவஞ்சிக்கொடி போன்றவள் போறிலை அடையட்டுமடா மதம்பொங்கி பொங்கி ஸ்தனபாரம்இரண்டும் வெளியில் எட்டிப் பார்க்கட்டும் அதுவரையிலும் நீ பொறுத்துக் கொள்ளடா.

குடக்கோடக்கொற்றக் குடைநீரிலோடம் கொடித்தடந்தேர்
வடக்கோடவாரியின் வாயோடவின்மத னோடமைமாத்
தடக்கோடணியுஞ் சிவகயிலாயத்துத் தையலர்வாய்
இடக்கோட நம்மன்பர் தேரோடிவந்த திளங்கொடியே.

உரை—மலைபின்மீது தோன்றும் அந்த வெள்ளைக்கொற்றக் கொடை ஜலத்திலோடவும் கொடிகள் புனைந்த பெரியதேர் வடக்கேயோடவும் கடலின்வாய் ஓடவும் கரும்புவில்லையுடைய காமன் ஓடவும் பெரியவிசாலமான சிகரங்களையணியப்பெற்ற சிவகைலாய மலையில் மாதர்களது வாய்மொழியோட நமது அன்பரது தேர் ஓடிவந்தது இளங்கொடியை நிகர்த்தவளே.

அலைபாழிநஞ்சை யமுதாவருந்தியமரரெல்லாம்
சலியாமற்காத்த வருணாசலேசர் தருநல்வரையில்
நிலையாயிருக்கும் விலைமாதரே என்னை நீர்கொடுபோய்ப்
புலியூரைக்காட்டிக் கலையூரிற்சேர்த்திடின் புண்ணியமே.

உரை, கடலில் உண்டான விஷத்தை அமிர்தமாயுண்டு தேவர்களைகார்த்த அருணாசலேசரது நல்லமலையின்மீது சதாவிருக்கும் தாசிகளே என்னை நீங்கள்கொண்டுபோய் புலியூரைக்காட்டி கலையூரிற்சேர்த்திடிற் உமக்கு மிக்க புண்ணியமுண்டாகும்.

சொல்லியற்சொல்லிலமுதானசொல்லியைச்சொற்கரும்பு
வில்லியைமோகவிடாய்தணிப்பாளைவிழியம்பினால்
சொல்லியசொல்லியம்பாவையொப்பாளைக்குளிரொற்றியூர்
வில்லியைப்புல்லியகைக்கேயிவள்வந்துவாய்ந்ததுவே.

உரை. சொல்லப்பட்ட இயற்சொல்வில் அமிர்தமான சொல்லையுடைய புகழ்பெற்ற கரும்புவில்லைபடைத்த மன்மதனது மோகவிடாய்தணிப்பவளை தனது கண்களான அம்பினல் ஆடவரைசொல்லுகிற கொல்லியம் பாவைநிகர்த்தவளை குளிர்ந்த திருவொற்றியூரில் ஒருகொடியைப் போல் வாளைத்தழுவி யகைத்கே இவள் வந்து கிடைத்தது.

அரியெச்சிலசெய்யு மாலெச்சிலும்மை யரியெச்சிலும்
எரியெச்சிலோடு முனியெச்சிலும்பொரவேந்திழையாள்
கரியெச்சிலாயினள் விக்ரமச்சோழன் கனத்தகுன்றில்
புரியெச்சிலுண்ட வரியெச்சினளும் புரப்பவனே.

உரை. விக்கிரமசோழனது பெரியமலையில் முறுக்கப்பட்ட கயிற்ருற் கட்டுபட்ட திருமாலின் எச்சிலான பூமியைதினமும் காப்பவனே கடலை எச்சிலாக்கின பாம்பின் எச்சலான தென்றற்காற்றும் கருத்தவண்டினது ஓசையும் எரியும்பாம்பின் எச்சிலான சந்திரனேடு அகஸ்தியமுனி யெச்சிலாகியகடலும் பொர என்மகள் யானையெச்சிலான இளங்கனியானள்.

எறிக்கும்புகழ்க்கச்சி யேகம்பா சம்பனெண்டிசையும்
பொறிக்கும்புலியான் புயம்வேட்டபின்னிந்தப் பூவையன்னள்
வெளிக்குங்குமக் கொங்கைமீதே விழிசொரிவெள்ளந்துள்ளித்
தெறிக்குந்திவலை யழிக்குஞ்சிந்தூர திலகத்தையே.

உரை. வீசும் புகழ்படைத்த கச்சியேகம்பா சம்பன் எட்டுதிக்கும் எழுதிய புலிக்கொடியுடையவன் தோள்களை விரும்பிய பிறகு இந்த பூவையை நிகர்த்தவளது வாசம்பொருந்திய குங்குமமணிந்த கொங்கைமீது கண்பொழிகின்ற நீர்பெருக்கானது துள்ளித்தெளிக்கின்ற துளியானது சிந்தூரப்பொட்டினை அழிக்கும்.

சித்தமகிழ்ந்து வருசொக்கநாதர் செழுங்கிரிமேல்
மெத்தைவிரித் ததின்மேலிருவரு மேவிச்செவ்வாய்
முத்தங்கொடுத்து முகத்தோடணைத்து முலைவருடி
நித்தமுங்கொஞ்சி விளையாடிநல்ல நிலவிதுவே.

உரை—சித்தம் மகிழ்ந்துவரும் சொக்கநாதரது செழிப்பான மலையின்மீது மெத்தையை விரித்துப்போட்டு அதின்மீது இருவரும் அமர்ந்து செவ்விய அதரபானம்செய்து முகத்துடனணைத்து முலைவருடி நாள்தோறும் கொஞ்சிவிளையாட நல்லநிலா இது.

அரக்கனலையிலங்கையை வென்றோன் மருமகன்
தணிகேசனன்பர் யானெஞ்
சிரக்தனலையாமலுனைக் காப்பாறென்றனையடி
தேமொழியேமாலை
வரக்கனலைமதிவீச படுமோவவ் வேலைதனில்
வாதுகேம
துரக்கனலைமதப்பயலென் முளங்குளிக்கத்தகுமோ
சொற்றேகை நீயே.

உரை—அரக்கனாகிய ராவணனுடைய இலங்கையை வென்ற திருமாலின் மருகனாகிய தணிகைமலை வேலவன் தன்னிடத்தி லன்பு வைத்தவரிடத்தி லருள்பாளிக்கும் மனமுள்ளவனாதலால் உன்னைக் காப்பாற்றுவானென்று சொல்லினையே தோழியே மாலைக்காலம் வரனம் சந்திரன் அனல்வீசவும் அதேசமயம் வம்புசெய்யும் மன்மதன் எங்நேரில்நின்று இனிமை தாங்கிய கரும்புவில்லை வளைக்கலாமோ சொல்லடிபெண்ணே.

முந்தனத்தைதூதுவிட்டேன் வரவுமில்லை மதராஜன்
முனிந்தேவில்லால்
எந்தனதுக்கிலக்காக வெய்கின்றான் மலர்வாளி
இனியென்செய்வேம்
கனந்தனத்தையகலாத பூம்பாவை வேலப்பன்
கையாற்பூசம்
சந்தனத்தை சவ்வாதை நினைந்துமனமுருகுதடி
தையலாளே.

உரை. பெண்ணாளே முன்னால் அன்னத்தை தூதுவிட்டேன் வரவில்லை காமராஜன் கோபித்து தன்கரும்புவில்லைக்கொண்டு மலர்க் கணையால் எனது ஸ்தனங்களின்மீது குறிவைத்து எய்கிறான் இனி

யென்செய்வேன் செல்வத்தையும் அறிவையும் நீங்காத பூம்பாவை லேலப்பன் கையினல் பூசியசந்தணம் சவ்வாதை நினைந்தல்லவோ என்மனம் உருகுதடி.

செவ்வந்திமாலே சிவந்ததென்று டிங்கள்
சேர்ந்ததென்ருள்
கைவந்தவண்டு கழன்றதென்ருள்
கலேசேர்ந்ததென்ருள்
மைவந்தகண்ணி திருவொற்றியூரை
மதுரையென்ருள்
எவ்வந்தியோ வறியே னிவள்சொன்ன
விடுவந்தியே.

உரை—அந்தியாகிய மாலேக்காலம் வந்துவிட்டது சந்திரனும் பிரகாசிக்கின்ருன் கையிலுள்ள கங்கணம் கழன்றது என்ருள் ஆடை யவிழ்ந்ததென்ருள் அஞ்சனமெழுப்பட்ட கண்களையுடையவள் திருவொற்றியூரை மதுரை என்று இவள் சொன்ன அநியாயத்திற்கு எவ்விதமான முடிவு ஏற்படுமோ அறியேன்.

மதிசூடியதில்லையம்பலவாணர்வரையிடத்தே
அதிசயமிக்கவதிசயமேமான்வீதிவரத்
துதிசெய்துமூவெட்டுத்தும்பியுங்கொண்டு துவண்டொருபெண்
எதிர்நின்றிரண்டுமரங்கரத்தேபிடித்தேகினளே.

உரை—சந்திரனையணிந்த சிவபிரான் மலேயின்கண் அதிசயம் மிக்க அதிசயமே என்னவென்ருல் சிவபிரான் வீதியில் பவனிவரக் கண்ட ஒருபெண் துதித்து இருபத்துநான்கு யானையுங் கொண்டு (இரண்டு கரங்களைத்தூக்கி) துவண்டு எதிர்நோக்கி ஆலாத்தியைக் கரத்தில் பிடித்துப்போனுள்.

மாலேதனைப்புனைந்தாலும்மலரணையிற்படுத்தாலும்
மருவார்பன்னீர்
ஏலமுறத்தெளித்தாலுமெவ்வளவேனுங்குளிர
விலேயென்செய்வேன்
கோலமுறுமணவியிலேகிளைகளொடுசுகம்படைத்துக்
குலாவுமெங்கள்
சோலேதனைச்சேராமற்காமவிடாய்தணியாதே
தோகைமாரே.

உரை. புஷ்பமாலையைச் சூடினாலும் புஷ்பசயனத்தில் படுத்தாலும் மணம் மிகுந்த பன்னீரை அதிகமாகத் தெளித்தாலும் சிறிதளவும் குளிர்ச்சியாகவில்லையே என்னசெய்வது அழகுமலிந்த மணவியிலே சுற்றத்தாருடன் கூடி சுகவாழ்வைப்பெற்று வாழ்கின்ற எங்கள் சோலையப்ப முதலியாரைக்கூடி சுகிக்காமல் காமயேக்கம் தனியாது மாதர்களே.

மாலாக்கியென்னைப்பெருவயதாக்கியென்மார்பின்முலை
பாலாக்கியங்கம்பசுநரம்பாக்கியப்பாவையரை
மேலாக்கிச்சிக்குவிளக்கெண்ணையாக்கியென்மேனியெங்குந்
தோலாக்கவோமகனேபிள்ளையாய்த்தோன்றினையே.

உரை. குமாரனே என்னை மயங்கச்செய்து பருவவயதுடையவளாக்கி என் மார்பினிலுள்ள தனத்தில் பால்சுறக்கவைத்து உடம்பை பச்சைநிற நரம்புகள் தோன்றும்படிசெய்து அந்த மாதரை மேலாகச்செய்து என்மேனி எல்லாம் விளக்கெண்ணையில் சிக்குநாற்றமுண்டாக்கி தோலாகச் செய்வதற்குதானோ பிள்ளையாக வந்து ஜெனித்தனை.

வண்டோவிழிநுதல்வான்பிறை வல்குன்மான்குலம்போ
செண்டோமுலைநித்திலமோ நகையிடைசேர்துடியோ
கண்டுமொழிகுழல் காரோமுகங் கமலப்பவளத்
துண்டோவிதழ்கன்னித் தண்டோதொடையிர்ந்ததோகையர்க்கே

உரை— இம்மாதுக்கு கண்கள்வண்டோ நெற்றிசந்திரனோ அல்குல்மானின்கும்புதானோ ஸ்தனங்கள் புஷ்பச்செண்டுகளோ பல்வெண்முத்துதானோ இடையானது உடுக்கையோவார்த்தை அமிர்தமோ கூந்தல் கரியமேகமோ முகம் தாமரைமலரோ அதரம் பவளத்துண்டுதானோ தொடை வாழைத்தண்டுதானோ.

ஆயத்துறையிற் பிறந்துவந்தந்தனர்
பால்குடித்து
மாயக்கண் வேசையிடத்தே வளர்ந்து
வண்ணனொருநாள்

ஏயப்புலவ ரிடத்தெட்டு காள்செட்டியே
னென்றுபின்
போயக்கச்சாலே புகுக்தனள்கா ணந்த
பொய்மகளே.

உரை. அந்த பொய்யெனும் பெண் சூதாடுமிடத்தில் பிறந்து பிராமணர்பாலே பருகி தாசியிடத்தில் வளர்ந்து வண்ணான் ஒருநாள் கலக்க வித்துவானிடத்தில் எட்டுநாள் கலந்திருந்து செட்டி ஏனென் றுவார்த்தையாடி கம்மாலேயில் பிரவேசித்தாள்,

பூச்சிலேக்கன்னற் கைச்சேஷாசலேந்திரன்
பொருப்பிடத்தே
காச்சியபாலேக் குடிபோவென்றே னந்த
காரிகையும்
பேச்சிலெடுத்துக் கள்ளிபின்கை கைராமற்கு
முன்சொன்னதாய்
வாச்சுதென்றே நடந்தாள் பாலேயான
வனந்தனி ல.

உரை. அழகுமலிந்த கரும்புவில்லேத்தாங்கும் கைகளேயுடை யசேஷாசலேந்திரனது மலேயில் காச்சியபாலே குடிபோ வென்றேன் அந்தப்பெண்ணும் பேச்சில் சமர்த்துடையவ ளானதால் முன்னுல் ஸ்ரீராமனுக்கு கைகேசிசொன்னதுபோல் வாய்த்ததென்று சொல்லிக் கொண்டு பாலேவனத்தில் நடந்தாள்.

மேகம்ப றைசிலேவேல் குமிழ்வள்ளே வெண்
முத்தந்தொண்டை
பூகம்பசுங்கழைதேனுமிழ் காந்தன்பொற்
பாவிலேநூல்
நாகங்கதலி யலேவன்வரானனன்
னளினமுண்டு
மாகம்பொழிற்றிரு தில்லேயிலே ஒரு
வல்லியிலே

உரை. ஆகாயத்தை யளாவிய சோலைசூழ்ந்த ... யில் ஒருகொடியில் மேகமும் சந்திரனும் த... குமிழம்புஷ்பமும் வள்ளைதண்டும் வெண்மையா... வைக்கனியும் கமுகமும் பசுமையாகிய மூங்கில் ... காந்தள் மலரும் அழகுபொருந்திய ஆலிலையும் ... மும்வாழைத்தண்டும் நண்டும் வரால்மீனும் தாமரைமலரும் இரு... கின்றது.

வல்லியென்பது ஒருபெண் மேகம் பிறை என்றது முறையே கூந்தல் நெற்றி புருவம் கண் நாசி காது பல் தொண்டை அதரம் கழுத்து தோள் கை வயறு இடை அல்குல் முழந்தாட் கணைக்கால் பாதமாகும்.

பாதாதிகேசமுதலாயிவளைப்படைத்தமலர்
வேதாமருங்குல்வெளிவைப்பனேவிரிபூதலத்துள்
ஆதாரமின்றியிரண்டிளநீரந்தரநிற்குமோ
ஏதாகிலுஞ்சற்றங்கில்லாதிராதிடையேந்திழைக்கே,

உரை. பாதம்முதல் சிரசுவரையில் இவளை சிருஷ்டிசெய்... பிரமதேவன் இடையை வெளியாக வைப்பானோ, விசாலமாகிய உ... கில் ஆதாரமின்றி யிரண்டு இளநீர்கள் ஆகாயத்தில் நிற்குமோ? நி... காது, (அதுபோல்) இப்பெண்ணுக்கு இடையானது ஏதாகிலு... சற்று அவ்விடத்தில் இல்லாமலிராது இருக்கும்,

## அநுபந்தம்.

நெஞ்சி லரவிந்தம் நீள்பசலி மாம்பூ
துஞ்சும் விழியி லசோகமாம் - வஞ்சியர்தம்
சென்னியிலே முல்லை திகழ்நீலங் குறியினிலே
யன்னவே ளெய்யு மியல்பாம்.

உரை. நெஞ்சியில் தாமரைமலரையும், சூதமலரை ஸ்தனத்திலும், கண்ணில் அசோகமலரையும், சிரசில் முல்லைமலரையும், பெண்களுக்கு காமராஜன் எய்யும் இயல்பாகும்.